

# 05 எமது கடமை

சொத்துக்கள் தனியார் சொத்துக்கள், அரசாங்க சொத்துக்கள் என்று இரண்டு வகைப்படும். தனி நபர்களுக்கு சொந்தமான சொத்துக்கள் தனியார் சொத்துக்கள் ஆகும். தனியார் சொத்துக்களுக்கு பல உரிமையாளர்கள் இருப்பார்கள். ஆனால் அரசாங்க சொத்துக்கள் என்பது பொது மக்களுடைய பயன்பாட்டிற்கு உள்ள சொத்துக் களாகும். இவை பொதுச் சொத்துகள் என்றும் அழைக்கப்படும்.

இன, மத, நிற பேதமின்றி, ஏழை, பணக்காரர் பாகுபாடின்றி அனைவருக்கும் பொதுவான சொத்துகளே பொதுச் சொத்துகள் ஆகும். எடுத்துக்காட்டாக, நாங்கள் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தும் அரசாங்கத்திற்குச் சொந்தமான பஸ்வண்டி, புகையிரதம், கப்பல், விமானம், அரச வைத்தியசாலை, அரச பெருந்தோட் டங்கள், காடுகள், பொலிஸ் நிலையங்கள், கூட்டுத்தாபனங்கள், விமானநிலையம், சரணலாயங்கள், துறைமுகம், அரச கட்டடங்கள், அரச பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் ஆகியன எமது சமூகத்தில் காணப்படும் பொதுச் சொத்துகளில் சிலவாகும்.

இவற்றின் மூலம் நாம் அனைவரும் பல்வேறு பயன்களைப் பெறுகிறோம். எனவே இச்சொத்துகளைப் பாதுகாப்பது எமது கடமையாகும்.

## அரும்பதங்கள்
## වදන් පෙළ

| | | |
|---|---|---|
| *1.* கடமை | - | යුතුකම |
| *2.* பொதுச் சொத்துகள் | - | පොදු දේපොල |
| *3.* தனியார் | - | පෞද්ගලික |
| *4.* உரிமையாளர் | - | උරුමකරු / අයිතිකරු |
| *5.* அரசாங்க சொத்துக்கள் | - | රජයේ දේපොල |
| *6.* பொது மக்கள் | - | මහ ජනයා |
| *7.* போக்குவரத்து | - | ගමනාගමනය |
| *8.* விமான நிலையம் | - | ගුවන්තොටුපල |
| *9.* துறைமுகம் | - | වරාය |
| *10.* கூட்டுத்தாபனம் | - | සංස්ථාව |
| *11.* அரச பெருந்தோட்டம் | - | රාජ්‍ය වතුයාය |
| *12.* பேதமின்றி / பாகுபாடின்றி | - | වෙනස්කම් නැතිව/භේදයකින් තොරව |



### செயற்பாடு - 1
### ක්‍රියාකාරකම - 1

**விடை எழுதுவோம்.**
**පිළිතුරු ලියමු.**

1. பொதுச் சொத்து என்றால் என்ன?

______________________________________________

2. பொதுச் சொத்துகள் ஐந்தின் பெயர்களைக் குறிப்பிடுங்கள்.

______________________________________________

3. பொதுச் சொத்துகளின் பயன்கள் சிலவற்றைக் குறிப்பிடுங்கள்.

______________________________________________



## செயற்பாடு - 2
## ක්‍රියාකාරකම - 2

**பின்வரும் சொற்களைக் கொண்டு வாக்கியங்கள் அமைக்குக.**
පහත සඳහන් වචන යොදා අර්ථවත් වාක්‍ය ලියන්න.

1. பொதுச் சொத்துகள்
2. போக்குவரத்து
3. கடமை
4. பொது மக்கள்
5. பேதமின்றி



## செயற்பாடு - 3
## ක්‍රියාකාරකම - 3

**கீழே தரப்பட்டுள்ள ஒருமைச் சொற்களைப் பன்மைச் சொற்களாக மாற்றுங்கள்**
පහත දී ඇති ඒක වචන පද බහු වචන පදවලට හරවන්න.

1. கூட்டுத்தாபனம்
2. சொத்து
3. பெருந்தோட்டம்
4. சரணாலயம்
5. பல்கலைக்கழகம்



## செயற்பாடு - 4
## ක්‍රියාකාරකම - 4

**உங்கள் பிரதேசத்தில் பொதுச் சேவைகளை வழங்கும் 8 நிறுவனங்களைக் குறிப்பிடுங்கள்.**

ඔබ ප්‍රදේශයේ පොදු සේවා සපයනු ලබන ආයතන 8ක් නම් කරන්න.



## செயற்பாடு - 5
## ක්‍රියාකාරකම - 5

**'எமது பொதுச் சொத்துக்கள்' என்ற தலைப்பில் 50 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதுங்கள்.**

'පොදු දේපල' ගැන වචන 50ක පමණ රචනයක් ලියන්න.